அலகு-I திராவிட மொழிகளின் ஒப்பாய்வு.

1. தென் திராவிட மொழிகள் பிரிந்து உட்பிரிவாக குன்றுவது

திராவிட மொழிகளில் தென் திராவிட மொழிகளில் எத்தனை மொழிகள் உள்ளன. அவை எவ்வாறு ஒவ்வொரு மொழியையும் மாற்றம் பெற்றுள்ளன என்று இவ்விரு இக்கட்டுரையில் காண்போம்.

தென் திராவிட மொழிகள்

* தமிழ்.
* மலையாளம்,
* இருளா,
* கொடகு,
* கோடா.
* தோடா,
* படகா,
* கன்னடம்,
* துளு

அவை ஒன்பதும் தென் திராவிட மொழிகள் ஆகும்.

இவற்றில் தமிழும், மலையாளமும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருக்க காரணம் அவை மிகப் பழங்காலத்தில் உறவானவையாகும்.

பேராசிரியர். எமனோ, Bh கிருஷ்ணமூர்த்தி அறிஞர் துளு மொழி ஏனைய மொழிகளிலிருந்து வேறுபடுவதால் அதை

தென்திராவிட மொழிகளில் இணைக்க வேண்டும் என்கின்றனர்.

ஆனால், டாக்டர் P. S. சுப்ரமணியம் அவர்கள் தென்திராவிட மொழியிலருந்து துளு மொழி தனியே பிரிந்த காரணத்தினால்தான் அது தமிழ், மலையாளம் போன்றவற்றிலிருந்து வேறுபடுகிறது. எனவே, அவையும் தென் திராவிட மொழியே என்று கூறுகின்றார்.

படகா மொழி கன்னடத்தின் கிளை என்று கூறுகின்றனர். படகா மொழியை நீலகிரி மாவட்டத்தின் படகர் மக்கள் பேசுகின்றனர்.

கோடா, கோட்டா போன்றவை நீலகிரி மலைப்பகுதியிலுள்ள பழங்குடி மக்களால் பேசப்பட்டு வருகின்றது.

1798-ம் ஆண்டு R.E. ராபர்ட் என்பவர் துளு மொழி தனி மொழி என்று கூறினார். 1837-ம் ஆண்டு கோடா மொழி தனிமொழி என்று தெரிய வந்தது.

1961-ம் ஆண்டின் கணக்கின்படி இம்மொழிகளைப் பேசும் மக்களின் எண்ணிக்கை:

| | |
|---|---|
| தமிழ் | - 3,056 கோடி |
| மலையாளம் | - 1,701 கோடி |
| இருளா | - 4617 |
| கொடகு | - 80 ஆயிரம் |
| தோடா | - 900 |
| கோடா | - 800 |
| படகா | - 1,742 கோடி |
| கன்னடம் | - 70 ஆயிரம் |
| துளு | - 5.1 இலட்சம் |

இவை தற்போது பெருமாற்றத்தைக் கொண்டு 6 கோடிக்கு மேலாக உள்ளனர்.

## தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்:

தென் திராவிட மொழிகளில் உயர்திணை ஒருமையில் ஆண்பால், பெண்பால் என்ற பிரிவைக் காண்கிறோம். பெண்பால் ஒருமைக்கெனத் தனி விகுதியும் காணப்படுகின்றன.

மொழி முதலில் 'சகர ஒலி' கெட்டு 'உகர ஒலியாக' மாறுகின்றது.

பார்ஜி - சுப்பு
தமிழ் - உப்பு

இம்மொழிகளில் ஒரு சொல் வெடிப்பொலியைக் கொண்டு முடிவுமென்றால் 'உகர ஒலியைப்' பெறுகின்றது. இத்தகைய ஒலியினை 'ஒலித்துணை உயிர்' என்கிறோம்.

தென் திராவிட மொழிகளில் இது இடை இதழ்வி ஒலியாக உள்ளது.

தமிழ், மலையாளம் மொழிகளில் இகர, உகர ஒலிகள் தெலுங்கு, கன்னடம் மொழிகளில் எகர, ஒகர ஒலிகளாக மாறுகின்றன.

கன்னட மொழியில் ககர ஒலி தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் சகர ஒலியாக மாறுகிறது.

கன்னடம் - கிவி
தமிழ் - செவி

ஆனால், தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளின் முன்னுயிர்களோடு 'ட், ண், ள்' என்னும் வளைநா ஒலிகள் வரும்போது இம்மாற்றம் ஏற்படுவதில்லை.

வேற்றுமை ஏற்கும் வடிவங்களான யன், யம் என்பன என், எம் என்று மாறுகின்றன.

அஃறிணைப் பன்மை விகுதி கட்டாய உருபாகக் கட்டாயம் இல்லை.
(எ.கா.)
பத்து மாடுகள்,
பத்து மாடு

மேலைத் திராவிட மொழிகளின் இடைநிலைகளான 'த், -ந்த்-, -த்த்-, -இ-' ஆகிய நான்கும் பயின்று வருவதைக் காணலாம்.

வியங்கோள் வினைமுற்று விகுதியாக -ka என்பதைக் காணலாம்.

தொடர் வடிவில் 'வேண்டும்' என்பதை இணைத்து உடன்பாட்டுப் பொருளையும், 'உம்' விகுதிக்குப் பதிலாக அகாரம் (அ) அம் விகுதியை இணைத்து எதிர்மறைப் பொருளையும் உருவாக்கலாம்.
(எ.கா.)
வர வேண்டாம்.
வர வேண்டும்.

இவ்வாறான இவைகள் ஏனைய மொழிகள் அன்றி தென் திராவிட மொழிகளில் மட்டுமே தெளிவாகக் காணப்பட்டுள்ளன.

தென் திராவிட மொழிகளில் தமிழ் சிறப்பியல்புகள்:

ஏனைய திராவிட மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கும் போது அடிப்படையாக்கத்தில் மிகச் செழுமையாக உள்ள மொழி தமிழ். தொல்காப்பியத்திலும், நன்னூலிலும் இதற்குச் சான்றுகள் உள்ளன.

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே".

என்று தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

மேலும், எழுத்து வடிவமைந்த தொன்மையான இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட மொழி தமிழேயாகும்.

பேச்சு வடிவம், எழுத்து வடிவம் இரண்டிலும் நிறைய மாறுதல் இல்லாத மொழியும் தமிழேயாகும்.

அதிக சொல்வளமும், சொற்சுருட்சியும் பெற்ற மொழியும் தமிழேயாகும்.

தமிழ்மொழியின் தொன்மையான கல்வெட்டுக்கள் பெரும்பாலும் தமிழிலேயே உள்ளன.

பலமொழிக் காலங்களில் மிகத் இலக்கியங்களையும், தொன்மையான இலக்கணங்களையும், பேணிப் பாதுகாக்கும் இயல்பு அதிகமாகவும் இருப்பதால் ஒப்பியல் ஆய்வுக்குத் தமிழ்மொழியே சிறந்தது ஆகும்.

பேசப்படும் பகுதி:

காக்கைப் பாடினியார் என்னும் புலவர் தமிழ் வழங்கிய எல்லையை

'வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்
வேங்கடம் குமரி தீம்புனல் பௌவமென்
றின்னான் கெல்லை'..."

என்று வரையறுக்கின்றார்.

டாக்டர். கால்டுவெல் தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து, வங்காள விரிகுடாவரையும் இடைப்பட்ட பழவேற்காடு

முதல் குமரி வரை பரந்து விரிந்த நிலங்களில் தமிழ் பேசப்பட்டு வந்துள்ளது என்கிறார்.

## தமிழும் திராவிடம்:

தமிழ் என்னும் சொல்லை ஆராய்ந்த டாக்டர். கால்டுவெல் 'திராவிடம்' என்பதன் இணையான வடசொல் 'தமிழ்' என்பதன் அடியும் என்றும், 'திராவிடம்' என்ற சொல்லே படிப்படியான மாற்ற நிலையில் 'தமிழ்' என்று அமைந்தது வந்தது என்றும் கூறுகின்றார்.

தமிழென் கிளவி - தொல்.
தமிழ் கூறு நல்லுலகம் - தொல். பாயிரம்
தமிழ் தலை மயங்கிய - புறம்
தமிழ் கெழு கூடல் - புறம்

என்ற தொடர்களே தமிழ் தொன்மையானது என்பதற்குச் சான்றாகும்.

தெலுங்கர்களும், கன்னடர்களும் தமிழ் என்பதை 'அரவம்' என்று கூறி வந்துள்ளனர்.

## தமிழ் மக்கள்:

திராவிட மொழிகளின் தொன்மை வாய்ந்த பண்பாட்டு உயர்தனிச் செம்மொழி தமிழ் தாய் மொழியாகக் கொண்ட தமிழ் மக்களின் அருமையையும் வியந்து பாராட்டும் டாக்டர். கால்டுவெல் தமிழ் மொழியை நாகரிக மேம்பாட்டின் உச்ச நிலையில் பண்பாட்டு வளர்ச்சி மிக்க சிறந்த நாட்டு மக்களோடு ஒப்பிடுவர்

பேசுகின்றனர்.

மலையாளம்:

தமிழுக்கு அடுத்த உச்ச நிலையில் வைத்துப் பாராட்டப்படும் மொழி மலையாளம் ஆகும். இதை சேர நன்னாட்டில் பேசி வருகின்றனர். ஏறக்குறைய இரண்டு கோடி மக்கள் பேசுகின்றனர். தமிழ் ஒரு வகையில் அதே நிலையைப் பெற்று வருகின்றது. (சா. கா.)

மலை > மல

கன்னடம்:

இம்மொழியை கர்நாடக மாநிலத்திலும், மராத்தி நாட்டின் தென் பகுதியிலும் பேசப்படுகிறது. இதனைக் 'கருநாடகம்' என்றும், 'கனாரிஸ்' என்றும் அழைப்பர். நீலகிரிப் பகுதியில் உள்ள படகர்கள் பேசும் மொழி கன்னட மொழியோடு தொடர்புடையதாக உள்ளது. இரண்டு கோடி மக்கள் இதனை பேசுகின்றனர்.

தேவாங்க கன்னடம்:

கன்னட மொழியின் வட்டார வழக்குகளில் ஒன்று தேவாங்க கன்னடம். தமிழ்நாட்டிலுள்ள கிணத்துக்கடவு, அருப்புக்கோட்டை போன்ற பகுதிகளில் உள்ள தேவாங்க செட்டியார் என்னும் மக்கள் இதை பேசுகின்றனர்.

தமிழின் அமைந்த பல தொன்மையான இலக்கண நூல்களை

இம்மொழியில் இன்றும் காண முடிகின்றது.
(எ.கா.)
வெண்கிலங்கள் > வெங்கிலங்கு

கொடா கன்னடம்:

கர்நாடக மாநிலத்தின் தென் பகுதியாகும் கூர்க் மாவட்டத்திலுள்ள கொடவர்களின் பேச்சு மொழியாகும். இது கன்னட மொழியின் வட்டார வழக்கு ஆகும். இது கன்னட மொழியிலிருந்து வெகுவும் மாறுபடுகின்றது.

14 உயிர் வகைகளும், 22 மெய் வகைகளும் உள்ளன. 70,000 மக்கள் பேசி வருகின்றனர்.

படகா:

இவை நீலகிரிப் பகுதியிலுள்ள ஊட்டி, குன்னூர் பகுதி மக்கள் பேசுகின்றனர். இதுவும் கன்னட மொழியின் வட்டார வழக்கு ஆகும். இது தனி மொழி எனவும் பல ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

துளு:

இம்மொழியை டாக்டர். கால்டுவெல் திருந்திய மொழியாகக் கூறிய போதிலும் இலக்கிய வளமோ, வரி வடிவமோ இல்லை.

பேசில் மிஷனரிச் சார்ந்த பாதிரிமார்கள் இம்மொழியில் நூல்களை எழுதி கன்னட மொழியில் வெளியிட்டது.

மைசூர் மாநிலத்தை அடுத்த சந்திரகிரி, கல்யாணபுரி போன்ற இடங்களில் ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் இம்மொழி பேசப்பட்டு வருகின்றது.

கொடகு:

எழுத்தும் இலக்கிய வளமும் இல்லாத இம்மொழியை வழக்காறலேயே நின்று நிலவும் இம்மொழியை டாக்டர். மோக்லிங் என்பவர் ஆராய்ந்து தமிழோடு பெருங்கேண்மையுடையது என்று கூறிச் சென்றுள்ளார்.

தோடா:

நீலகிரி மலைப் பகுதிகளிலும் தோடர்கள் இம்மொழியைப் பேசி வருகின்றனர். கி.பி.1837 ம் ஆண்டு பேராசிரியர் பொர்காட் ஸ்கிம்ட் என்பவர் இதனை ஆராய்ந்து திராவிட மொழிக் குடும்பத்தோடு தொடர்புடையது என்று கூறிச் சென்றுள்ளார். 1961 ம் ஆண்டின் கணக்கின்படி 800 மக்கள் இம்மொழியைப் பேசி வருகின்றனர்.

கோடா:

நீலகிரி மலைப்பகுதியில் உள்ள கோடர்கள் இம்மொழியைப் பேசி வருகின்றனர். சுமார் 700 மக்கள் இம்மொழியைப் பேசி வருகின்றனர்.

இருளா:

நீலகிரிப் பகுதியில் உள்ள இருளர்கள் இம்மொழியினைப் பேசுகின்றனர். அண்மையைப் பகுதிகளில் உள்ளவர் 'வட்டக்காடு இருளர்கள்' என்றும், நீலகிரிப் பகுதியில் உள்ளவர் 'மலைதேச இருளர்கள்' என்றும் அழைக்கப்படுகிறது.

பேராசிரியர் கமில் சுவலபில் இம்மொழியை விரிவாக ஆராய்ந்தார். Irulas of the Blue Mountain என்ற பெயரில் இவர் எழுதிய நூல் இத்துறையில் மிகவும் மதிப்பிடத்தக்கது ஆகும்.

முடிவுரை:

இவ்வாறு தென் திராவிட மொழிகளில் ஒவ்வொரு மொழியும் வெவ்வேறு பகுதிகளில் பேசப்பட்டு வருகின்றன. மேலும், ஒவ்வொரு சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. இவையே 'தென் திராவிட மொழிகள்' ஆகும்.